சமுர்த்தி நுண் நிதிய காகிதாகிகள் சுழல் நிதியத்தின் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு அலுவல்கள் தொடர்பான இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரைக்கு இணங்க பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும் என நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றது.

**1.2 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல் தொடர்பான முகாமைத்துவத்தினதும் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினரினதும் பொறுப்புக்கள்**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் 16(1) உபபிரிவின் பிரகாரம் அனைத்து கணக்காய்வு செய்யப்படும் நிறுவனங்களினாலும் அந்த நிறுவனம் தொடர்பான வருடாந்த மற்றும் கால ரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது வருமானங்கள், செலவினங்கள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாக பேணுதல் வேண்டும். அந்த அதிகாரச் சட்டத்தின் 16(2) உபபிரிவின் பிரகாரம் அனைத்து கணக்காய்வு செய்யப்படும் நிறுவனம் தொடர்பாக வருடாந்த நிதிக்கூற்றுக்கள் விதிகளின் மூலம் காட்டக்கூடியவாறு காலப் பகுதியொன்றில் அந்த நிறுவனத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையின் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். அந்த அதிகார சட்டத்தின் 38(1)(ஈ) உபபிரிவின் பிரகாரம் வருடாந்த அறிக்கைகள் மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்கள் உரிய நேரத்தில் தயாரிக்கபட நேரிடுகின்றது என உறுதிப்படுத்த வேண்டியதுடன், மேலும் கணக்காய்வு செய்யப்படும் நிறுவனத்திற்குரிய வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் பொறுப்பாக இருக்க வேண்டும்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்**

2020 ஆகஸ்ட் 28 திகதிய 01/2020 இலக்கம் கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையின் பந்தி 15 இல் அடங்கியுள்ள நிதிப் பிரமாணம் 877(2)(ஈ) இற்கு இணங்க நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் கணக்காண்டு முடிவடைந்து 02 மாதத்திற்குள் செயலாற்றுகை அறிக்கையுடன் திறைசேரியின் அரச நிதித் திணைக்களத்திற்கு பிரதியொன்றுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2020, 2021, 2022 மற்றும் 2023 ஆண்டுகளின் நிதிக்கூற்றுக்கள் இந்த அறிக்கைத் திகதி வரை கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை.

**1.4 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் நிலைமை**

நிதியத்தினால் இறுதியாக தயாரிக்கப்பட்டிருந்த 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானங்கள் மற்றும் செலவுகள் தொடர்பான விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| **நிதிக்கூற்றுக்களின் விடயம்** | **பெறுமதி** |
|---|---|
| | **ரூபா** |
| சொத்துக்கள் | |
| நடைமுறை அல்லாத சொத்துக்கள் | 33,198,564 |
| நடைமுறைச் சொத்துக்கள் | 134,519,860 |
| **மொத்தச் சொத்துக்கள்** | 167,718,424 |

| | |
|---|---|
| உரிமை மற்றும் பொறுப்புக்கள் | |
| உரிமை | 144,867,690 |
| பொறுப்புக்கள் | |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | 22,850,734 |
| | -------------------------- |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | 167,718,424 |
| | ========== |
| மொத்த வருமானம் | 13,336,957 |
| மொத்த செலவுகள் | 2,318,911 |
| | ------------------------ |
| **மிகை** | 11,018,046 |
| | ========= |

**2. கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**2.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) நிதிப் பிரமாணம் 381(i) | நிதியத்தின் நடைமுறைக் கணக்கிற்காக நிதிப் பிரமாணத்திற்கு இணங்க திறைசேரியின் அங்கீகாரம் பெற்றிருக்கவில்லை. | எதிர் காலத்தில் திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ii) நிதிப் பிரமாணம் 382 | 2023 திசெம்பர் மாத வங்கி இணக்கக் கூற்றின் படி 2017 ஜனவரி 30 முதல் 2023 ஆகஸ்ட் 08 திகதி வரை வைப்புச் செய்திருந்த போதிலும், தேறி இருக்காத பெறுமதி ரூபா 701,020 தொகைக்கான 17 காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட்டு இந்தக் காசோலைகள் 2024 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு தீர்ப்பதற்கு உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது என. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (iii) நிதிப் பிரமாணம் 383 | 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வங்கி இணக்கக் கூற்றின் படி கூட்டுப் பெறுமதி ரூபா 38,108,485 தொகையான நேர் அனுப்புதல்களை இனங்கண்டு காசேட்டில் பதிவு செய்து கணக்கீடு செய்திருக்கவில்லை. இந்த அனுபுதல்களின் 2016 ஒக்தோபர் 05 திகதி முதல் 2019 ஜூன் 26 திகதி வரை பிரதேச | மாவட்டங்களில் பணம் வைப்புச் செய்து பற்றுச்சீட்டின் பிரதிகள் அனுப்புவதில் தாமதம் காணப்படுவதனால் மாவட்டங்களை அறிவுருத்தப்பட்டதுடன், வங்கியினால் குறிப்பிட்ட காசோலை வைப்புக்களுக்குரிய விபரங்கள் | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அலுவலகங்களில் இருந்து நேர் அனுப்புதல்கள் என வைப்புச் செய்யப்பட்டிருந்த கூட்டுப் பெறுமதி ரூபா 928,675 தொகைக்கான 09 காசோலைகள் காணப்பட்டது. | பெற்றுக்கொண்டு அந்த மாவட்டங்களை அறிவுறுத்தும் அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், எதிர் காலத்தில் நேரடியாக காசோலைகள் இந்த பிரிவிற்கு அனுப்புவதற்காக மாவட்டங்களை அறிவுறுத்தப்பட்டதென. | |
| (ஆ) | பிரிவு II இன் பந்தி 09 இல் அடங்கியுள்ள நிதிப் பிரமாணம் 880 | அரச பணங்களின் நம்பிக்கைப் பொறுப்புடைமை மற்றும் பாதுகாப்பு தொடர்பாக திணைக்களத் தலைவரினால் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் பிணை வைப்பது தொடர்பாக பொறுப்பாக இருக்க வேண்டிய போதிலும், நிதியத்தின் பணம் மற்றும் இருப்புத் தொடர்பாக உரிய உத்தியோகத்தர்கள் பிணை வைப்பு செய்திருக்கவில்லை. | இந்த நிதியத்தில் கணக்கு அலுவல்கள் தொடர்பாக முதலாவது கையொப்பம் இடும் உத்தியோகத்தர்களினால் பிணை வைக்கப்பட்டுள்ளதுடன், இரண்டாவது கையொப்பமிடும் சமூர்த்தி முகாமையாளர்கள் இருவர் மற்றும் களஞ்சியப் பொறுப்பாளரினால் எதிர் காலத்தில் பிணை வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பெறுகை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பெறுகை வழிகாட்டல் கோவையின் பந்தி 3.4 இற்கு இணங்க பெறுமதி குறைவான அங்கீகரிக்கப்பட்ட விபரக் குறிப்புக்கள் காணப்படுகின்ற உடனடியாக பெற்றுக்கொள்ளக்கூடிய பண்டங்களை கொள்வனவு செய்யும் போது சந்தை விலையை ஒப்பீட்டு முறையை தெரிவு செய்ய முடியுமாக இருந்த போதிலும், 2023 ஆண்டிற்காக கொள்வனவு செய்திருந்த ரூபா 115.7 மில்லியனிற்கான காகிதாகிகள் கொள்வனவின் போது, பெறுகை வழிகாட்டல் கோவையின் பந்தி 3.2.2 இற்கு இணங்க பத்திரிகை அறிவித்தல் வெளியிட்டு தேசிய மட்டத்தில் போட்டி விலை கூறல் அழைப்பதற்கு நடவடிக்கை எடுக்காமையால் பெறுகைக்காக ஆர்வமுள்ள தரப்பினருக்கு அதில் | 2024 ஆண்டு முதல் திறந்த சந்தையில் விலைகளை ஒப்பீட்டு முறைமையின் கீழ் கூறுவிலை அழைத்தல் மேற்கொள்ளப்பட்டிருந்ததென. | பெறுகை வழிகாட்டல் கோவைக்கு இணங்க செயற்பட வேண்டும். |

பங்குபற்றுவதற்குரிய சந்தர்ப்பத்தை இழந்திருந்ததுடன், உயர்ந்த பண்பையுடைய ஆனால் குறைந்த கிரயத்தின் கீழ் உச்சமட்ட பொருளாதார அனுகூலங்களை பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. அதேபோல், குறிப்பிட்ட சட்டதிட்டங்கள் மற்றும் விபரக் குறிப்புக்களுக்கு இணங்கக்கூடியவாறு மற்றும் மதிப்பாய்வு மற்றும் தெரிவு செய்தல் செய்முறை வெளிப்படைத் தன்மையின்றி மேற்கொள்ளப்பட்டுள்ளதென அவதானிக்கப்பட்டுள்ளது.

## 3.2 தீர்க்கப்பட்டிருக்காத கணக்காய்வுப் பந்திகள்

அரசியலமைப்பின் 154(6) உறுப்புரைக்கு இணங்க 2019 ஜனவரி 01 திகதி முதல் 2019 திசெம்பர் 31 திகதி வரையான காலப் பகுதி தொடர்பாக என்னால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் பந்தி 3.2 இன் கீழ் அடங்கியிருந்த பின்வரும் கணக்காய்வு அவதானிப்புக்கள் தொடர்பாக முறையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

| | தீர்க்கப்பட்டிருக்காத கணக்காய்வுப் பந்திகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை சலுசல நிலையத்திற்கு சொந்தமான களஞ்சியத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிந்த காகிதாகிகள் இருப்பு 2010 ஆண்டின் போது அகற்றப்பட்டிருந்த போதிலும், அதற்காக செலுத்தியிருந்த ரூபா 1,454,112 தொகைக்கான களஞ்சிய வாடகை வைப்பினை திருப்பி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்தத் தொகையை தீர்த்துக்கொள்வதற்காக தொடர்ந்து பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு தற்போது அந்த பணம் சாட்டுதல் ஒன்று என தடுத்து வைத்திருந்த நிறுவனத்தை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என. | பெற வேண்டிய தொகையினை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2018 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காகிதாகிகள் அச்சிடுவதற்காக அரச அச்சகத் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டியிருந்த ரூபா 21,269,895 தொகை 04 வருடங்களுக்கு மிகையான காலம் கடந்திருந்த போதிலும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த நிதியத்தின் இறுதிக் கணக்குகள் இறுதியாக தயாரித்திருந்தது 2019 ஆம் ஆண்டிலேயாகும். அதனால் அந்த பொறுப்புக்கள் தொடர்பான காசேடுகள், சமர்ப்பிக்கப்பட்டிருந்த இன்வொயிஸ்கள் உட்பட அனைத்து கொடுக்கல் வாங்கல்களையும் பரிசோதனை செய்து தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 திகதிய 01/2020 இலக்கம் கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையின் 15 ஆவது பந்தியில் அடங்கிய நிதிப் பிரமாணம் 877(1) இற்கு இணங்க வருடாந்தம் அடுத்த வருடத்திற்கான பாதீடு அந்த நிதியத்தின் குறிக்கோள்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டு திறைசேரியின் அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்காக தேசிய பாதீட்டு பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட வேண்டியதுடன், அதன் பிரதியொன்று அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட வேண்டியிருந்த போதிலும் அதன்படி செயற்பட்டிருக்கவில்லை. அதன்படி, அங்கீகரிக்கபட்ட பாதீடொன்று இன்றி மீளாய்வாண்டின் போது வங்கி காகிதாகிகள் பெற்றுக்கொள்வதற்காக ரூபா 115,720,800 தொகை செலவிடப்பட்டிருந்தது. | 2023 ஆண்டின் பெறுகைத் திட்டம் அமைச்சுச் செயலாளரினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அதன்படி அங்கீகரிக்கப்பட்ட பண வரையறையுள்ள பெறுகை அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டது. 2023 ஆண்டின் காகிதாகிகள் செலவுத் தொகை ரூபா 80,266,000 தொகையாகும் என. | நிதிப் பிரமாணங்கள் மற்றும் சுற்றறிக்கை அறிவுரைகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |